# பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முகவுரை | 1–3 |
| I | கூட்டுறவுக் கடன் அமைப்பு | 4–40 |
| II | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 41–63 |
| III | நுகர்வோர் கூட்டுறவுகள் | 64–73 |
| IV | சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள் | 74–79 |
| V | பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு | 80–94 |
| VI | கூட்டுறவு கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 95–101 |
| VII | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் | 102–104 |
| VIII | கூட்டுறவுத் தேர்தல் | 105–107 |
| | நிறைவுரை | 108 |

# முகவுரை

**1.** கூட்டுறவின் ஜனநாயகக் கோட்பாடு என்பது தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னரே அறியப்பட்டு, ஏழை எளிய மக்களின் வாழ்வு மேம்பட "கூட்டுறவு இயக்கத்தை" நாட்டிற்கு அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. **1904–**ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில் திரூரில் முதல் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு கூட்டுறவுத்துறை முக்கிய பங்காற்றி வருகிறது.

**2.** கடன் மற்றும் பிற இடுபொருட்களை வழங்கி மாநிலத்தின் வேளாண் வளர்ச்சியில் மிகப்பெரிய தாக்கத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டு வந்துள்ளன. இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி வேளாண் விளைபொருட்களுக்கான உரிய விலை விவசாயிகளுக்கு கிடைத்திட, கூட்டுறவுத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. கூட்டுறவுகள், உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தல் மற்றும் பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் அத்தியாவசியப்

பொருட்களை விநியோகம் செய்தல் உட்பட நுகர்வோர் தேவைகளையும் நிறைவு செய்து, பெரும் பணியாற்றி வருகின்றன.

**3.** மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களால் விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியில் பயிர்க்கடன்கள் வழங்கப்படுகிறது. உரிய காலத்தில் பயிர்க்கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கான வட்டித்தொகையை முழுமையாக அரசே ஏற்றுக்கொள்கிறது. பயிர்க்காப்பீடு வழங்குவதுடன், கறவைமாட்டுக்கடன், டிராக்டர் கடன், சொட்டு நீர்ப்பாசனக்கடன் போன்ற வேளாண் முதலீட்டுக் கடன்களும் கூட்டுறவுகளால் வழங்கப்பட்டு வருகின்றன.

**4.** மலைவாழ் மக்களால் உற்பத்தி செய்யப்படும் சாமை, வரகு, புளி மற்றும் தேன் ஆகிய பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவி அளித்தும், பதனிடும் அலகுகள் அமைத்தும் உரிய விலையினை இடைத்தரகர்கள் இன்றி முழுமையாக பெற்றிட கூட்டுறவு நிறுவனங்கள் துணை நின்று வருகின்றன.

**5.** நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் தொடக்க கூட்டுறவு

பண்டகசாலைகள் பொதுமக்களுக்கு அத்தியாவசிய நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதை முதன்மை நோக்கமாக கொண்டு, வெளிச்சந்தையில் விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்காக தனியாக விலை நிலைப்படுத்தும் நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புற பகுதிகளில், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் கூட்டுறவுகள் மூலம் திறக்கப்பட்டு, தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தரமான மருந்துகள் கூட்டுறவுகள் நடத்தும் ‘‘அம்மா மருந்தகம்’’ மூலம் பொது மக்கள் நலனுக்காக 20% தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

**6.** தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுகள் பெரும்பாலான நியாயவிலைக்கடைகளை நடத்துவதுடன் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் முக்கியப் பங்கு ஆற்றுகின்றன.

# இயல் – I


## கூட்டுறவுக் கடன் அமைப்பு

கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் தனியார் கடன் வழங்குவோரின் பிடியிலிருந்து விவசாயிகளை விடுவிப்பதற்காக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் துவக்கப்பட்ட நிறுவனங்களாகும். இவை, சிக்கனம், சுயஉதவி மற்றும் பரஸ்பர உதவி போன்ற உயரிய நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டு, ஒருங்கிணைந்த கடன் முறைகளைப் பின்பற்றி செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக அமைந்து, பொதுமக்களுக்கு, குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் கடன் வழங்கி வருகின்றன. மேலும், மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக பல்வேறு அரசு திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றன.

மாநிலத்தில் உள்ள கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள், குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நகரக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள் என நான்கு வகை சங்கங்களாக உள்ளன.

## 2. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு, கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், மாவட்ட அளவில், மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மாநில அளவில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும் கொண்ட கூட்டாட்சி அமைப்பாகும். இக்கூட்டுறவு நிறுவனங்கள், விவசாயிகளின் வேளாண் கடன் தேவையையும், பொதுமக்களின் அவசர கடன் தேவையையும் நிறைவு செய்கின்றன.



## 2.1 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

மாநிலத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கூட்டுறவு கடன் அமைப்பின் அடித்தளமாக திகழ்கின்றன. தமிழ்நாட்டில் செயல்படும் **4450** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், குறுகிய கால பயிர்க்கடன் மற்றும் மத்திய கால முதலீட்டுக் கடன்களை வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த பணிகளான நுண் நீர்ப்பாசனம், நில மேம்பாடு, கறவை மாடுகள் வாங்குதல் போன்றவற்றிற்கு வழங்கி வருகின்றன. மேலும், இச்சங்கங்கள் வீட்டுவசதிக் கடன், சுய உதவி குழுக்களின் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளுக்கும் மற்றும் இதர பண்ணைச் சாரா நடவடிக்கைகளுக்கும் கடன்களை வழங்கி வருகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பயிர்காப்பீட்டு திட்டமான ''பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா'' (PMFBY) மாநிலத்தில் செயல்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருகின்றன.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், விவசாய இடுபொருட்களான உரம், விதைகள் மற்றும் சிறு வேளாண் கருவிகள் விற்பனையினை மேற்கொண்டு

வருகின்றன. இவை தவிர, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் **16,177** முழு நேர நியாயவிலைக் கடைகளையும், **8,151** பகுதி நேர நியாயவிலைக் கடைகளையும் மற்றும் **15** நகரும் நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகள் பின்வருமாறு:

**தொகை (ரூ.கோடியில்)**

| விவரம் | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 |
|---|---|---|---|---|---|
| வைப்புத் தொகை | 5,987.72 | 6,874.66 | 7,352.64 | 6,606.17 | 6,371.79 |
| கடன் வழங்கியது | 20,326.63 | 19,409.52 | 15,403.51 | 17,784.88 | 19,723.89 |

## 2.2 மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களை செயல் எல்லையாக கொண்டு செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் செயல்படும் **23** மத்திய கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியினை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருகின்றன.

இவ்வங்கிகள், தமது செயல் எல்லையில் உள்ள தொடக்க சங்கங்களுக்கு தேவைப்படும் நிதி உதவி வழங்கி, அவற்றின் நிதி சமநிலைப்படுத்தும் மையமாக திகழ்வதோடு மட்டுமல்லாமல், இணைப்பு சங்கங்களை கண்காணித்தல், வழிநடத்துதல் மற்றும் ஆய்வு செய்தல் போன்ற பணிகளையும் செய்து வருகின்றன. மத்தியக் கூட்டுறவு வங்கிகள், பொது மக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகை, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன்கள் மூலம் நிதி ஆதாரங்களைப் பெறுகின்றன. இவ்வங்கிகள் வட்ட மற்றும் வட்டார அளவில் செயல்படும் **876** கிளைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இக்கிளைகள் மூலமாக பொதுமக்களுக்கு நேரிடையாக வங்கியியல் சேவையினையும் வழங்கி வருகின்றன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் நடப்பாண்டு இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும், **23** மத்திய கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியியல்

உரிமம் பெற்றுள்ளன. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் பின்வருமாறு :

**தொகை (ரூ. கோடியில்)**

| **வ. எண்** | **விவரம்** | **2014-15** | **2015-16** | **2016-17** | **2017-18** | **2018-19 *** |
|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர் களின் பங்கு மூலதனம் | 1,052.70 | 1,248.49 | 1,252.23 | 1,308.93 | 1,421.28 |
| | மாநில அரசின் பங்கு | 63.70 | 63.70 | 67.94 | 68.32 | 62.87 |
| | ஒதுக்கீடு மற்றும் உபரி | 3,351.33 | 3,537.67 | 3,460.53 | 3,480.12 | 4,142.41 |
| | வைப்புகள் | 22,748.33 | 25,667.74 | 28,343.91 | 27,693.41 | 28,733.90 |
| | பெறப்பட்ட கடன்கள் | 5,609.60 | 5,043.30 | 4,340.41 | 4,885.59 | 6,301.52 |

***** உத்தேசமாக

மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (Core Banking Solutions) நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக, இவ்வங்கிகள், நவீன வங்கியியல் சேவைகளான நிகழ்நேர மொத்த தீர்வு (Real Time Gross Settlement), தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (National Electronic Fund Transfer) மற்றும்

குறுஞ்செய்தி வசதி (SMS Alert) போன்ற சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றன. **2017–18** ஆம் ஆண்டில், மத்திய கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டைகள் (Rupay Debit Cards) வழங்கப்பட்டது. மேலும், மாநிலத்தில் **54** இடங்களில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் (Automatic Teller Machines) மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் நிறுவப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடன் பெறும் விவசாயிகள், பயிர்க்கடன் தொகையை தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் பெறுவதற்கு வசதியாக ரூபே வேளாண் கடன் அட்டைகள் (Rupay Kisan Credit Cards) வழங்கப்பட்டுள்ளது. **2018–19** ஆம் ஆண்டில், வாடிக்கையாளர்களுக்கு அலைபேசி வங்கியியல் சேவையும் (Mobile Banking Services) மத்திய கூட்டுறவு வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்டு தேசிய மற்றும் வணிக வங்கிகளுக்கு இணையாக வழங்கப்படும் நவீன வங்கி சேவைகளால் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு, **2018–19** ஆம் ஆண்டில், கடன் மதிப்பீடு, நிதி மேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் செயலற்ற சொத்து மேலாண்மை போன்ற பொருட்களில் **791** பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 2.3 தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பணிகளை ஒருங்கிணைத்திடவும், கடன் கூட்டுறவு நிறுவனங்களை பண சந்தை மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியுடன் இணைத்திடும் அமைப்பாக **1905–**இல் துவக்கப்பட்டது. மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்திற்கான கடன் கொள்கைகளை வகுப்பதில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி முக்கிய பங்காற்றி வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி பொதுமக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறும் மறுநிதி உதவி, தேசிய உடல் ஊனமுற்றோர் மேம்பாட்டு நிதிக்கழகம் மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன்

ஆகியவற்றின் மூலம் நிதியாதாரங்களைத் திரட்டி வருகிறது. இவ்வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு, குறுகிய கால மற்றும் மத்திய கால வேளாண் கடன்களை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக வழங்குவதற்கு மறுநிதி உதவி அளித்து வருவதுடன், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அதன் இணைப்புச் சங்கங்களுக்கு கடன் வழங்குவதற்காக, தனது சொந்த நிதி ஆதாரத்திலிருந்து காசுக்கடன்( Cash Credit ) வசதி மூலமாக நிதியுதவி வழங்குகிறது. இவ்வங்கி, சென்னையிலுள்ள **47** கிளைகள் மூலம் பொதுமக்களுக்கு வங்கிச் சேவையினை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்தின் மூலம் மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நிதிநிலையில் வலுவான நிறுவனமாகத் திகழ்ந்து

வருகிறது. கடந்த **5** ஆண்டுகளில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளின் ஒப்பீடு விவரம் பின்வருமாறு :

**தொகை(ரூ.கோடியில்)**

| வ. எண் | விவரம் | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 * |
|---|---|---|---|---|---|---|
| 1. | உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | 282.44 | 287.30 | 291.77 | 291.77 | 296.26 |
| 2. | மாநில அரசின் பங்கு | 20.26 | 20.26 | 20.26 | 20.26 | 20.26 |
| 3. | ஒதுக்கீடு மற்றும் உபரி | 827.21 | 855.63 | 778.66 | 598.01 | 700.92 |
| 4. | வைப்புகள் | 7,767.79 | 8,927.93 | 11,240.46 | 8,305.54 | 8,384.98 |
| 5. | பெறப்பட்ட கடன்கள் | 3,309.24 | 3,037.81 | 2,455.26 | 2,844.19 | 3,222.76 |
| 6. | நிகர இலாபம் | 41.38 | 43.31 | 43.70 | 81.83 | 105.01 |

* உத்தேசமாக

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (Core Banking Solutions) நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதனால், தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (National Electronic Fund Transfer), நிகழ் நேர மொத்தத் தீர்வு (Real Time Gross

Settlement) குறுஞ்சேவை வசதி (SMS facility), உடனடி கட்டண சேவை வசதி (Immediate Payment Service) மற்றும் அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking Service) போன்ற நவீன வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வங்கி வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அட்டைகளை இந்தியாவிலுள்ள எந்த ஒரு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்திலும் பயன்படுத்தலாம். இவ்வங்கி, சென்னையில் 11 இடங்களில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் மூலமாக சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் நவீன வங்கியியல் தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியினையும், வைப்புத் தொகை உத்தரவாத நிதியினையும் பராமரித்து வருகிறது. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நிதிப்பங்களிப்பிலிருந்து உருவாக்கப்பட்ட **தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியானது** தொடக்க

வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை வலுப்படுத்தவும், இச்சங்கங்களில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. **31.03.2019** தேதியில், தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியில் **ரூ25.90** கோடி இருப்பில் உள்ளது. **வைப்புத் தொகை உத்தரவாத நிதிக்கு,** தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பங்களித்து வருகின்றன. இந்நிதியானது, பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்பு நிதிகளைத் திரும்ப வழங்க இயலாத தொடக்க வேணான்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பொதுமக்களுக்கு வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குவதற்குப் பயன்படுத்தப்டுகிறது. **31.03.2019** தேதியில் வைப்புத் தொகை உத்தரவாத நிதியில் **ரூ.236.65** கோடி இருப்பில் உள்ளது.

## 2.4 வழங்கப்படும் சேவைகள்

### (i) பயிர்க்கடன்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகள் பயிர் சாகுபடி மேற்கொள்ள குறுகிய கால பயிர்க்கடன்களை வழங்கி வருகின்றன. இக்கடன்கள், பயிர்க்

கடனளவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட கரும்பு பயிர்க்கு 10 ஏக்கர் வரையிலும், பிற பயிர்களுக்கு **ரூ.1.6** இலட்சம் வரையிலும் நபர் பிணையத்தின் பேரில் வழங்கப்படுகிறது. அனைவரும் உள்ளடக்கிய வளர்ச்சியை எய்தும் வகையில், பயிர்க்கடன்கள் சிறு, குறு விவசாயிகள், பட்டியலின வகுப்பு / பட்டியலின பழங்குடியின விவசாயிகள் மற்றும் கூட்டு பொறுப்பு குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பயிர்க்கடன் வழங்குவதற்கு இந்திய அரசிடமிருந்து பெறும் வட்டி மானியம் அல்லாமல், தமிழ்நாடு அரசு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு 2% வட்டி மானியத்தை வழங்கி வருகிறது. இதனால், மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் விவசாயிகளுக்கு 7% வட்டி விகிதத்தில் பயிர்க்கடன் வழங்கி வருகின்றன. மேலும் உரிய காலத்திற்குள் பயிர்க் கடனைத் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு, இந்திய அரசு வழங்கும் 3% வட்டி ஊக்கத் தொகையுடன் கூடுதலாக தமிழக அரசு, 4% வட்டி ஊக்கத் தொகை வழங்குகிறது. இதன் காரணமாக, உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பி செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

2018–19 ஆம் ஆண்டில், **12,37,393** விவசாயிகளுக்கு **ரூ.8,127.68** கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், **1,27,183** பட்டியலின வகுப்பு / பட்டியலின பழங்குடியின விவசாயிகளுக்கு **ரூ.719.66** கோடி வழங்கப்பட்டுள்ளது. 2017–18 ஆம் ஆண்டில், 10,63,821 விவசாயிகளுக்கு **ரூ.6,220.27** கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு, கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக 2019–20 ஆம் ஆண்டில் **ரூ.10,000/–** கோடி பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயித்துள்ளது. இதற்கென விவசாயிகளுக்கு வட்டி மானியம் மற்றும் வட்டி ஊக்கத் தொகையாக **ரூ.200** கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### (ii) கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கான கடன்கள்

இது வரை எந்த நிறுவனங்கள் மூலமும் கடன் பெற இயலாதிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், வாரத்துக்கு பயிர்செய்வோர், குத்தகைக்குப் பயிரிடுவோர், வாய்மொழி குத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டுபொறுப்பு குழுக்கள் துவக்கப்பட்டுள்ளன. அனைவரையும் வங்கி பரிமாற்றத்திற்குள் கொண்டு வரும் நோக்கத்தினை எய்தும் வகையில், கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்குப்

பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. 2017–18 ஆம் ஆண்டில் **13,865** கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு **ரூ.360.28** கோடி வழங்கப்பட்ட பயிர்க்கடன், 2018–19 ஆம் ஆண்டில் **15,009** கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு **ரூ.440.62** கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. 2017–18 ஆம் ஆண்டில், 1,649 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு **ரூ.35.11** கோடி வழங்கப்பட்ட மத்திய கால முதலீட்டுக் கடன்கள், 2018–19ஆம் ஆண்டில், **1988** கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு **ரூ.49.09** கோடி ஆக உயர்ந்துள்ளது.

### (iii) வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்

நிலையான வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர்வை உறுதி செய்யும் வகையில், கூட்டுறவு நிறுவனங்கள் சொட்டு நீர் பாசனம், நில மேம்பாடு, வேளாண் இயந்திரமயமாக்குதல் போன்ற முதலீட்டு நோக்கங்களுக்காக கடன் வழங்குவதற்கு தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகின்றன. 2017–18 ஆம் ஆண்டில், **ரூ.365.01** கோடி முதலீட்டுக் கடன் வழங்கப்பட்டது. 2018–19 ஆம் ஆண்டில் முதலீட்டுக் கடன் வழங்குதல் **ரூ.438.95** கோடியாக உயர்ந்துள்ளது.

### (iv) தானிய ஈட்டுக் கடன்

சிறு மற்றும் குறு விவசாயிகளின் விளைபொருட்களை கிடங்குகளில் இருப்பு வைத்து அதற்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன் வழங்குவதனால், இவ்விவசாயிகள் அறுவடைக்காலங்களில் விளைபொருட்களின் விலை குறைவாக உள்ள போது தானியங்களை சேமித்து வைத்து இலாபகரமான விலை கிடைக்கின்ற போது விற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கிறது. **2017–18** ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட **ரூ. 306.08** கோடி தானிய ஈட்டுக் கடன், **2018–19** ஆம் ஆண்டில் **ரூ. 317.02** கோடியாக உயர்ந்துள்ளது.

### (v) சிறு வணிகர்களுக்கான சிறுவணிகக் கடன்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், பூ, காய்கறிகள் மற்றும் பழங்கள் வியாபாரம் செய்தல், பெட்டிக் கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்கு கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், குழு அமைத்து கடன்கள் வழங்குவது ஊக்குவிக்கப்படுகிறது. **2017–18** ஆம் ஆண்டில் இக்கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கான அதிகபட்ச

கடனளவு ரூ.10,000 லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இதன்படி கடன் பெறும் சிறுவணிகர்கள் ஒருவருக்கொருவர் பிணையதாரராகவும், பெற்ற கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்கின்றனர். 2017–18 ஆம் ஆண்டில் **ரூ.254.02** கோடி வழங்கப்பட்ட சிறுவணிகக் கடன், 2018–19 ஆம் ஆண்டில் **ரூ.368.47** கோடியாக உயர்ந்துள்ளது.

**(vi) சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி**

கடன் நிறுவனங்கள் மூலம் சுய உதவிக்குழுக்களுக்கு நிதி உதவி வழங்குவது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை எய்துவதற்கு இன்றியமையாதது என அரசு கருதுகிறது. 2018–19 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதம் 12.40% லிருந்து 11.50% ஆக குறைக்கப்பட்டுள்ளது. 2017–18ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட **ரூ. 810.95** கோடி சுய உதவிக் குழுக் கடன், 2018–19 ஆம் ஆண்டில் **ரூ.1,161.80** கோடியாக உயர்ந்துள்ளது. கூட்டுறவு கடன் நிறுவனங்கள் தொடர்ந்து சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதை

அதிகரித்து அவற்றின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

### (vii) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், மகளிர் தொழில் முனைவோருக்கு சிறு தொழில் தொடங்கவும் மற்றும் சேவை மையங்கள் அமைப்பதற்கும் ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்கி வருகின்றன. இக்கடன்களுக்கான வட்டி விகிதம், **2018–19** ஆம் ஆண்டில் 11% ஆக குறைக்கப்பட்டதுடன், மாநிலத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு வங்கிகளும் மகளிர் தொழில் முனைவோர்களுக்கு கடன் வழங்குவதற்கு ஒரே வட்டி விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2017–18 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட **ரூ.79.60** கோடி மகளிர் தொழில் முனைவோர் கடன், 2018–19 ஆம் ஆண்டில் **ரூ.102.40** கோடியாக உயர்ந்துள்ளது.

### (viii) பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மாத சம்பளம் பெறும் மகளிருக்கு கடன் உதவி

வழங்கி வருகின்றன. **2017–18** ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட **ரூ. 92.64** கோடி பணிபுரியும் மகளிர் கடன், **2018–19** ஆம் ஆண்டில் **ரூ. 106.89** கோடியாக உயர்ந்துள்ளது.

**(ix) மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்**

கூட்டுறவு நிறுவனங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு வருவாய் ஈட்டும் தொழில் மேற்கொள்ள கடன் வசதி அளித்து வருகின்றன. **2011–12** ஆம் ஆண்டிலிருந்து உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் கடன்தாரரிடம் வட்டி வசூலிக்கப்படுவதில்லை. **2018–19** ஆம் ஆண்டில், **7823** மாற்றுத் திறனாளிகளுக்கு **ரூ.36.41** கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(x) பங்குமூலதன உதவி**

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு கடன் நிறுவனங்களின் உள்ள பட்டியலின வகுப்பு/பட்டியலின பழங்குடியின உறுப்பினர்களுக்கு பங்கு மூலதன நிதியுதவி (Share Capital Assistance) வழங்கி வருகிறது. இதன் மூலம், கடன் பெறும் திறன் அதிகரித்து, பட்டியலின வகுப்பு/பட்டியலின பழங்குடியின உறுப்பினர்கள் கூட்டுறவு

நிறுவனங்களில் அதிக கடன் வசதி பெற உதவி வருகிறது. **2018–19**ஆம் ஆண்டில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள **8000** பட்டியலின வகுப்பு/பட்டியலின பழங்குடியின உறுப்பினர்களுக்கு வட்டியில்லா கடனாக தலா ரூ. **250/–** வீதம் ரூ. **20** இலட்சம் பங்கு மூலதன நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### (xi) பயிர்க்காப்பீடு

**'பிரதம மந்திரி பஃசல் பீமா யோஜனா' (PMFBY) –** புதிய பயிர்க்காப்பீட்டு திட்டம், விவசாயிகளின் துயர்துடைத்திடவும் அவர்களின் நலம் பேணும் பொருட்டும் **2016**ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2018–19ஆம் ஆண்டில், கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் **8,08,393** விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, **ரூ.83.91** கோடி காப்பீட்டு தொகை வசூலிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. **2016–17**ஆம் ஆண்டில் பயிர்களை காப்பீடு செய்த விவசாயிகளுக்கு **ரூ.2,367.39** கோடியும், **2017–18**ஆம் ஆண்டில் பயிர்க்காப்பீடு செய்த விவசாயிகளுக்கு **ரூ.959.72** கோடியும் மகசூல் இழப்புக்கான இழப்பீட்டுத்தொகையாக கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## (xii) வேளாண் சேவை மையம்

சிறு மற்றும் குறு விவசாயிகளின் வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க விவசாயப்பணிகளில் இயந்திரங்களின் பயன்பாடு என்பது இன்றியமையாததாகிறது. போதிய நிதி வசதி இல்லாததால் விவசாயப்பணிகளுக்கு இயந்திரங்களை சொந்தமாக அல்லது வாடகைக்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள விவசாயிகள், குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் வேளாண் இயந்திரமயமாக்குதல் பயன்களை பெறும் வகையில், அரசு, கூட்டுறவு சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள் அமைத்திடுவதற்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் கொள்முதல் செய்ய 50 விழுக்காடு மானியமாக ஒரு சங்கங்கத்திற்கு அதிகபட்சமாக **ரூ.20** இலட்சம் வரை வழங்கியுள்ளது. 2,104 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவை நியாயமான வாடகையில் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களையும், கருவிகளையும் வழங்கி வருகின்றன. 2018–19 ஆம் ஆண்டில் வேளாண் சேவை மையங்கள் மூலம் **ரூ.1.61** கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**(xiii) பொதுச் சேவை மையங்கள்**

கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு பல்வகை அரசு சேவைகளை துரிதமாகவும் மற்றும் வெளிப்படையாகவும் மின்னனு சேவைகளாக வழங்கிடும் வகையிலும், கூட்டுறவுச் சங்கங்கள் வருவாய் ஈட்டும் நோக்குடனும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்களில் பொதுச் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது, **4,403** பொதுச் சேவை மையங்கள் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இச்சேவை மையங்கள் இ–சேவை மற்றும் டிஜிட்டல் சேவா (Digital Seva Portal) போன்ற தளங்களின் மூலம் பலதரப்பட்ட சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றன. இம்மையங்களின் மூலம் வருவாய்த்துறையின் சேவைகளான வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், நிலவுடமை ஆவணம், முதல் பட்டதாரி சான்றிதழ் மற்றும் சமூக நலத்துறையின் சேவைகள், மேலும் பதிவுத்துறையின் சேவைகளான வில்லங்க சான்றிதழ் மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல் முதலான சேவைகளும்

வழங்கப்படுகின்றன. இம்மையங்கள் மூலம் அரசு சேவைகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் ஒரே இடத்தில் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமுமின்றி வழங்கப்படுகின்றன. இதன் மூலம் கிராமப்புற பொதுமக்கள் இச்சேவைகளை தங்கள் இருப்பிடங்களின் அருகிலேயே பெற முடிகிறது.

2018–19 ஆம் ஆண்டில் பொது சேவை மையங்களில் **70,97,883** சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு, இதன் மூலம் கூட்டுறவு சங்கங்களில் **ரூ.25.67** கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

## 2.5 2018–2019 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

### i) கூட்டுறவு நிறுவனங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2018–2019 ஆம் ஆண்டில் 117 கூட்டுறவு நிறுவனங்களுக்கு **ரூ.26.09** கோடி மதிப்பீட்டில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும் என சட்டமன்றத்தில் அறிவித்தார். இதில் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் கட்டடம் கட்டி

முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் கட்டுமான பணிகள் நிறைவு பெறும்.

**ii) கூட்டுறவு வங்கிகளில் புதிய கிளைகள் துவக்குதல்**

வாடிக்கையாளர்களுக்கு வங்கிச்சேவையினை அவர்களுக்கு அருகாமையில் உள்ள பகுதியிலேயே வழங்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், **2018–19**ஆம் ஆண்டில் **7** மத்திய கூட்டுறவு வங்கிகளின் **14** புதிய கிளைகள் **ரூ.2.10** கோடி மதிப்பீட்டில் துவங்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவித்தார். இதுவரை **10** புதிய கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கிளைகள் விரைவில் திறக்கப்பட உள்ளன.

**iii) நவீனமயமாக்குதல்**

கூட்டுறவு நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கவும், கூட்டுறவு நிறுவனங்களின் தோற்றப் பொலிவினை மேம்படுத்தவும், **2018–19** ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **94** கூட்டுறவு நிறுவனங்கள், **ரூ.9.85** கோடி செலவில்

நவீனமயாமாக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவித்தார். இதில், 62 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 1 மத்தியக் கூட்டுறவு வங்கி, 2 நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் 1 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகியவை நவீனமயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கூட்டுறவு நிறுவனங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**iv) கூட்டுறவு நிறுவனங்களில் வணிக வளாகம் கட்டுதல்**

கூட்டுறவு நிறுவனங்கள் அதிக வருவாயினை ஈட்டும் வகையில், 2018–19 ஆம் ஆண்டில் 5 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், **ரூ.1.50** கோடி மதிப்பீட்டில் வணிக வளாகங்களும், துறையூர் தாலுக்கா வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் **ரூ.1.85** கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபமும் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. அனைத்து சங்கங்களிலும் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

**v) கூட்டுறவு நிறுவனங்களின் அலுவலகக் கட்டடங்களை விரிவாக்குதல்**

கூட்டுறவு நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், 14 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் தற்போதுள்ள அலுவலகக் கட்டடங்கள் **ரூ.1.40** கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இச்சங்கங்களில் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

**vi) கூட்டுறவு நிறுவனங்களில் சூரிய ஒளி மின்கலம் அமைத்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் நிறுவுதல்.**

கூட்டுறவு நிறுவன வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவையினை தடையின்றி வழங்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், **ரூ.7.67** கோடி மதிப்பீட்டில் 133 கூட்டுறவு நிறுவனங்களில் சூரிய ஒளி மின்கலமும், 11 கூட்டுறவு நிறுவனங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரங்களும் அமைக்கப்படும் என்று 2018–19 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. இதன்படி சூரிய ஒளிமின்கலம் 88 கூட்டுறவு நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் 11 கூட்டுறவு நிறுவனங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. இதர நிறுவனங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**vii) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

**(அ) உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள்**

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உள்ளிட்ட 5317 கூட்டுறவு நிறுவனங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகள் மூலம் கூட்டுறவு நிறுவனங்களில் பொதுமக்கள் கடனுக்கு ஈடாக வைத்துள்ள நகைகள் மற்றும் முக்கிய ஆவணங்களின் பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. இதர கூட்டுறவு நிறுவனங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

## (ஆ) பாதுகாப்பு பெட்டகம் மற்றும் இரும்பு பெட்டகங்கள் நிறுவுதல்

கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் 2018 – 19 ஆம் ஆண்டில், 10 கூட்டுறவு நிறுவனங்களில் வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகங்கள், 9 கூட்டுறவு நிறுவனங்களில் நவீன உயர்தர பாதுகாப்பு பெட்டகங்கள் மற்றும் 13 கூட்டுறவு நிறுவனங்களில் இரும்பு பெட்டகங்கள் **ரூ.98.44** இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகம், நவீன உயர்தர பாதுகாப்பு பெட்டகம் மற்றும் இரும்பு பெட்டகங்கள் 32 கூட்டுறவு நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ளது.

## 3. நீண்டகாலக் கடன் அமைப்பு

தமிழ்நாட்டில் நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பில், மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும், வட்ட / வட்டார அளவில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளும் செயல்பட்டு வருகின்றன. இக்கடன் நிறுவனங்கள், விவசாயிகள்/பொது மக்களின்

பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத நீண்டகாலக் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

## 3.1 தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் திருத்தப்பட்ட கொள்கை வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி பெற இயலவில்லை. இருப்பினும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தனது சொந்த நிதியிலிருந்து தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் தொடர்ந்து சிறு பாசனம், இதர வேளாண் நடவடிக்கைகள் மற்றும் நகைக்கடன் வழங்குவதற்கு நிதி உதவி அளித்து வருகிறது. **31.03.2019** தேதியில் வங்கியின் பங்கு மூலதனம் **ரூ.41.20** கோடியாகவும், வைப்புகள் **ரூ.161.25** கோடியாகவும் உள்ளது.

## 3.2 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

மாநிலத்தில் **180** தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

இவ்வங்கிகள், சிறு பாசனம், நில மேம்பாடு, பண்ணை இயந்திரமயமாக்கல், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு மற்றும் இதர பணிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கி வந்தன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி கிடைக்கப் பெறாத நிலையில், இவ்வங்கிகள் தங்களிடம் உள்ள நிதியிலிருந்து பிரதானமாக நகைக்கடன்களை வழங்கி வருகின்றன. **2018–19** ஆம் ஆண்டில் இவ்வங்கிகள் **ரூ.1,074.40** கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கியுள்ளன.

### 3.3 ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம் 2014

தமிழ்நாடு அரசு, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் உறுப்பினர்கள் தவணை தவறிய பண்ணை சாராக் கடன்களை திருப்பி செலுத்தும் வகையில், **31.03.2014** அன்று தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் நிலுவையில் உள்ள பண்ணைசாரா கடன்களுக்கு ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தினை செயல்படுத்த ஆணையிட்டது. இத்திட்டம் **31.12.2019** வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் **31.03.2019** வரை மொத்தம் **3024** கடன்தாரர்கள், கடன் தொகை **ரூ.64.99** கோடி செலுத்தி, **ரூ.63.23** கோடி அளவிற்கு வட்டிச் சலுகையினை பெற்று பயனடைந்துள்ளனர்.

## 4. நகர கூட்டுறவு கடன் நிறுவனங்கள்

மாநிலத்தில் நகர கூட்டுறவு கடன் நிறுவனங்கள், மாநில அளவில் தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையத்தையும், நகர மற்றும் புறநகர் பகுதிகளில் செயல்படும் கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு கடன் சங்கங்களையும் உள்ளடக்கியதாகும்.

### 4.1 தமிழ் நாடு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையம்

மாநிலத்தில் நகர கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் வளர்ச்சியினை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டு தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையம் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையம் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிர்வாகம், பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும்

வங்கிகள் நவீன வங்கியியல் தொழில் நுட்பங்களை நடை முறைப்படுத்துதல் போன்றவற்றில் உதவி புரிந்து வருகிறது.

### 4.2 நகரக் கூட்டுறவு வங்கிகள்

நகரக் கூட்டுறவு வங்கிகள், நகர் மற்றும் புற நகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவைகள் மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. மாநிலத்தில் தற்போது **128** நகர கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று வீடு கட்டுதல், வணிகம் மற்றும் உறுப்பினர்களின் அவசர மற்றும் சொந்த தேவைகளுக்காக நகைக் கடன் உள்ளிட்ட இதர பண்ணை சாரா காரியங்களுக்காக கடன் வசதிகளை அளித்து வருகின்றன. **2018–19**ஆம் ஆண்டில், **8,46,337** உறுப்பினர்களுக்கு **ரூ.5,579.64** கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. **31.03.2019** அன்று நகரக் கூட்டுறவு வங்கிகளின் வைப்புத் தொகை **ரூ. 7,847.89** கோடி உள்ளது. **2018 –19** ஆம் ஆண்டில், நகரக் கூட்டுறவு வங்கிகளால், நகர்புறத்திலுள்ள **1224** சிறு வணிகர்களைக் கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு **ரூ.65.51** கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், அதிக வட்டியில் கடன் வழங்கும் தனியாரிடமிருந்து பல சிறுவணிகர்கள் கடன் பெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகள் ஏற்கனவே கணினிமயமாக்கபட்டுள்ளன. தற்போது நவீன வங்கியியல் சேவையினை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் பொருட்டு அனைத்து நகர கூட்டுறவு வங்கிகளிலும் மையவங்கியியல் தீர்வு முறையிலான சேவை (Core Banking Solutions) பணி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

### 4.3 நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள்

தமிழ் நாட்டில் இயங்கிவரும் 114 நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள், நகரங்கள் மற்றும் புற நகர்களில் வசிக்கும் மக்களுக்கு கடன் வழங்கும் பணியினை செய்து வருகின்றன. இச்சங்கங்கள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக் கடன் மற்றும் இதர பண்ணை சாராக் கடன்களை வழங்கி வருகின்றன. 2018–19 ஆம் ஆண்டில், நகரக் கூட்டுறவு கடன்

சங்கங்களால் உறுப்பினர்களுக்கு **ரூ.1,381.39** கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. **31.03.2019** தேதியில் நகரக் கூட்டுறவு கடன் சங்கங்களின் வைப்புத்தொகை **ரூ.1,338.13** கோடி உள்ளது. மேலும், நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் நகர்புறத்திலுள்ள **144** சிறு வணிகர்களை கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு **ரூ.9.01** கோடி கடன் வழங்கியுள்ளன.

## 5. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள், மத்திய மற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்களின் கடன் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் தற்போது **1,729** பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள், உறுப்பினர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதையும் நியாயமான வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்குவதையும் முக்கிய நோக்கங்களாக கொண்டு

செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள், **31.03.2019** தேதியில் **ரூ.2,880.79** கோடி பங்கு தொகையுடனும், நடைமுறை மூலதனமாக **ரூ.17,213.29** கோடியுடனும், உறுப்பினர்களுக்கு **2018–19** ஆம் ஆண்டில், **ரூ.6,731.28** கோடி அளவிற்கு கடன்கள் வழங்கியும் செயல்பட்டு வருகின்றன.

## 6. பணியாளர்கள் நலன்

### (i) கடன் கூட்டுறவு நிறுவன பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு

மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் நலனுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களில் பணிபுரியும் **22,048** பணியாளர்களுக்கு அதிகபட்சமாக **21%** வரை ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதனால், கூட்டுறவு கடன் நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு ரூ.143.72 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது.

## 7. தேசிய அளவில் வழங்கப்பட்ட விருதுகள்

தேசிய அளவில் பின்வரும் கூட்டுறவு நிறுவனங்கள் சிறந்த செயல்பாட்டிற்காக விருதுகள் பெற்றுள்ளன.

(i) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, 2017–18ஆம் ஆண்டில், மூன்று அடுக்கு கட்டமைப்பின் கீழ் சிறந்த ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்காக இரண்டாம் பரிசினை மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து (NAFSCOB) பெற்றுள்ளது.

(ii) கன்னியாகுமரி மாவட்டம், முகிலன்விளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், 2017–18 ஆம் ஆண்டில், சிறந்த செயல்பாட்டிற்கான சுபாஷ் யாதவ் விருதில் மூன்றாம் பரிசினை மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து (NAFSCOB) பெற்றுள்ளது.

(iii) ஈரோடு மாவட்டம், வீரப்பன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், 2016–17 ஆம் ஆண்டில், ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காக மூன்றாம்

பரிசினை மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து (NAFSCOB) பெற்றுள்ளது.

(iv) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் வேளாண் கூட்டுறவு பணியாளர்கள் பயிற்சி நிலையம் (ACSTI), 2016–17ஆம் ஆண்டில், சிறந்த செயல்பாடுகளுக்காக மூன்றாம் பரிசினை மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து (NAFSCOB) பெற்றுள்ளது.

2011–12 ஆம் ஆண்டிலிருந்து 27 கூட்டுறவு நிறுவனங்கள் சிறந்த செயல்பாட்டிற்காக அகில இந்திய அளவில் விருதுகள் பெற்றுள்ளன.

# இயல் –II

## கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

### 1. முன்னுரை

விவசாயிகளின் வேளாண் விளைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உதவிபுரிகின்றன. இவை சங்க உறுப்பினர்கள் மற்றும் நுகர்வோர் / வணிகர்கள் ஆகியோரை நேரடியாக இணைப்பதற்கான விற்பனைத் தளத்தை ஏற்படுத்தி அதன் மூலம் இடைத் தரகர்கள் / முகவர்களின் தலையீட்டினை நீக்கி, உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை சரியான விலைக்கு சந்தைப்படுத்துவதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்தி தருகின்றன. மேலும், விற்பனைச் சங்கங்கள், இடுபொருட்களை விநியோகித்தும், விளைபொருட்களின் மீது தானிய ஈட்டுக்கடன் வழங்கியும், வேளாண் விளைப்பொருட்களைப் பதனிடும் பணியினையும் மேற்கொண்டு வருகின்றன. நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்யும் முதன்மைச் சங்கங்களாக செயல்படுவதுடன் நியாயவிலைக் கடைகளை

நடத்தி அத்தியாவசியப் பொருட்களை பொது விநியோகத்திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்தும் வருகின்றன. மாநிலத்தில் **112** வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வட்டம் மற்றும் வட்டார அளவில் செயல்பட்டு வருகின்றன.

**1.2** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED), தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக, மாநிலத்தில் உள்ள இதர மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தலைமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல அளவிலான இணையமாக செயல்பட்டு வருகிறது. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது.

## 2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED)

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், **20.02.1959** முதல் செயல்படத் தொடங்கியது. இவ்விணையம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களான உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் உபகரணங்கள் ஆகியவற்றை நியாயமான விலையில் விநியோகித்து வருகிறது.

**2.1 2018–19** ஆம் ஆண்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் **ரூ.583.72** கோடி மதிப்பிலான **3,57,540** மெட்ரிக் டன் உரங்கள் மற்றும் **ரூ.15.42** கோடி மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகளை விநியோகம் செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமான, திருவாரூர் மாவட்டம், பாமணி கிராமத்தில் உள்ள உரக்கலவை ஆலையில் உற்பத்தி செய்யப்படும் பாமணி 17:17:17 என்ற உரக்கலவைக்கு பல மாவட்டங்களில் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு

உள்ளது. **2018–19** ஆம் ஆண்டில், ரூ.18.94 கோடி மதிப்பிலான 15,067 மெட்ரிக் டன் பாமணி உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. தற்போது பாமணி உர ஆலையின் செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு ரூ.**1.10** கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.2** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமாக **32,140** மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட **41** கிடங்குகளும், சென்னை கோயம்பேடு வணிக வளாகத்தில், **2,500** மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்றும், பேசின்பிரிட்ஜ் பகுதியில் **625** மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்றும் என இரு குளிர்பதனக் கிடங்குகள் உள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் இணைந்து விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்திட வழிகாட்டுதலையும் வணிகரீதியிலான ஆதரவையும் அளித்து வருகிறது.

**2.3** விவசாயிகளின் நலனுக்காக, தமிழ்நாட்டில் ஆதரவு விலைத் திட்டத்தினை செயல்படுத்திட தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையத்தின் (NAFED) முகவராக, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பட்டு வருகிறது.

**2.4** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகம் செய்வதற்காக மாட்டுத் தீவனத்தை ஆவின் நிறுவனத்திற்கு விநியோகம் செய்து வருகிறது. **2017–18** ஆம் ஆண்டில், ரூ.**60.58** கோடி மதிப்பிலான **33,270** மெட்ரிக் டன் அளவில் விற்பனை செய்யப்பட்ட மாட்டுத்தீவனம், **2018–19** ஆம் ஆண்டில், **ரூ.82.67** கோடி மதிப்பில் **45,418** மெட்ரிக் டன் அளவிற்கு உயர்ந்துள்ளது.

**2.5** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், இந்திய எண்ணெய்க் கழகத்துடன் இணைந்து **3** பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை அலகுகளை தலா ஒன்று வீதம் கோயம்பேடு, கடலூர் மற்றும் திருச்சியிலும், கோடம்பாக்கத்தில் ஒரு பெட்ரோல் விற்பனை அலகினையும் நடத்தி வருகிறது. **2017–18** ஆம் ஆண்டில், ரூ.**21.75** கோடி மதிப்பிலான

பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை செய்யப்பட்டது. இவ்விற்பனை **2018–19** ஆம் ஆண்டில், **ரூ.27.25** கோடியாக உயர்ந்துள்ளது.

**2.6** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் **2017–18** ஆம் ஆண்டில், ரூ.**8.01** கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

## 3. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF)

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மண்டலங்களில் உள்ள **12** கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல அளவிலான இணையமாக செயல்பட்டு வருகிறது. இவ்விணையம், உரங்கள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவற்றை விநியோகித்து வருகிறது. மேலும், உறுப்பினர்களுக்கு நகைக்கடன் வழங்கி வருவதுடன் அச்சகம் ஒன்றையும் இணையம் நடத்தி வருகிறது. **2018–19** ஆம் ஆண்டு, ரூ.34.36 கோடி மதிப்பிலான 40,301 மெட்ரிக் டன் உரங்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்துள்ளது. இது **2017–18** ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட ரூ.**29.58** கோடி மதிப்பிலான **36,491** மெட்ரிக் டன் உர அளவைவிட கூடுதலாகும். **2017–18** ஆம்

ஆண்டில் ரூ.76.27 கோடியாக இருந்த இணையத்தின் மொத்த புரள் வணிகம், 2018–19 ஆம் ஆண்டில் **ரூ.119.65** கோடியாக உயர்ந்துள்ளது.

## 4. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் (NCMS)

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியினையும் செயல் எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம், விவசாயிகள் விளைவிக்கும் உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், காரட், பீட்ரூட் மற்றும் பீன்ஸ் ஆகியவற்றை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதோடு, விவசாயிகளுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களையும் வழங்கி வருகிறது. இச்சங்கத்திற்கு சொந்தமாக, மேட்டுப்பாளையத்தில் உரக்கலவை அலகு ஒன்று உள்ளது. இச்சங்கம் சமையல் எரிவாயு முகமையாகவும் செயல்பட்டு வருகிறது. 2018–19 ஆம் ஆண்டில், இச்சங்கத்தின் மொத்த புரள் வணிகம் ரூ.69.80 கோடியாகும்.

## 5. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் (APCMS)

தமிழ்நாட்டில், தற்பொழுது **112** வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வேளாண் விளைபொருட்களைச் சந்தையிடுதல், உரம் மற்றும் இதர விவசாய இடுபொருட்களை விற்பனை செய்தல் ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான விற்பனைச் சங்கங்கள், முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு, அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்கின்றன. மேலும், இச்சங்கங்கள் நியாய விலைக் கடைகளையும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நடத்தி வருகின்றன. **2018–19** ஆம் ஆண்டில் இச்சங்கங்களின் மொத்த புரள் வணிகம் **ரூ.2,242.46** கோடியாகும்.

## 5.1. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

### (i) வேளாண் விளைபொருள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தனது உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பதற்கு ஏதுவாக ஏல விற்பனைக் களங்கள், உலர் களங்கள் மற்றும் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை விவசாயிகளுக்கு வழங்குகின்றன. மேலும், விவசாயிகளுக்கு, வேளாண் விளைபொருட்களின் சந்தை விலை நிலவரங்களை அளிப்பதுடன், வேளாண் விளைபொருட்களுக்கான நியாயமான சந்தைப்படுத்துதலை ஏற்படுத்தி கொடுக்கின்றன. சில சங்கங்கள், வேளாண் விளை பொருட்களை, பதப்படுத்துவதற்கும் மற்றும் மதிப்புக் கூட்டுவதற்கும் நேரடியாக கொள்முதல் செய்கின்றன. **2018–19** ஆம் ஆண்டில், இச்சங்கங்கள் **ரூ.897.52** கோடி மதிப்பிற்கு வேளாண் விளைபொருள்களை விற்பனை செய்துள்ளன.

**(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு என்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்து, பெறப்படும் தொகையினை, உறுப்பினர்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பெற்ற கடனுக்கு ஈடு செய்யும் வகையில் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், கடன்தாரர்களுக்கு சந்தைப்படுத்துவதற்கான வசதியினை ஏற்படுத்தி கொடுத்ததன் மூலம், **2017–18** ஆம் ஆண்டில் ரூ.**3.28** கோடி அளவிற்கு, உறுப்பினர்களின் கடன் ஈடுகட்டப்பட்டுள்ளது. இது **2018–19** ஆம் ஆண்டில், **ரூ.3.49** கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

**(iii) தானிய ஈட்டுக்கடன்**

அறுவடைக் காலங்களில், விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களை, அவசர பணத் தேவைகளுக்காக மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தவிர்க்க, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

வாடகை அடிப்படையில் சேமிப்பு வசதி அளித்தும், தானிய ஈட்டுக்கடன்களை வழங்கியும் வருகின்றன. 2017–18 ஆம் ஆண்டில், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.87.75 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக்கடன்கள் வழங்கியுள்ளன. இது 2018–19 ஆம் ஆண்டில், **ரூ.98.84** கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

**(iv) நகைக்கடன் வழங்குதல்**

விவசாய உறுப்பினர்களின் அவசர பொருளாதாரத் தேவைக்காக 2018–19 ஆம் ஆண்டில், **ரூ.296.51** கோடி அளவிற்கு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(v) தரமான விதைகள் விற்பனை**

அதிக மகசூல் மற்றும் மேம்பட்ட தரமான வேளாண் உற்பத்திக்கு, தரமான விதைகள் கிடைக்கச் செய்வது மிக இன்றியமையாததாகும். நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறு தானியங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமான விதைகளைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விற்பனை

செய்து வருகின்றன. **2017–18** ஆம் ஆண்டில், ரூ.**5.07** கோடி மதிப்பிலான விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. **2018–19** ஆம் ஆண்டில், **ரூ. 5.50** கோடியாக விதை விற்பனை உயர்ந்துள்ளது.

**(vi) உர விநியோகம்**

வேளாண் உற்பத்தியை அதிகரித்திட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், விவசாயிகளுக்கு உரங்களை ரொக்கத்திற்கு விற்பனை செய்வதுடன், யூரியா, டி.ஏ.ப்பி., பொட்டாஷ் போன்ற உரங்களை பயிர்க்கடனில் ஒரு பகுதியாகவும் வழங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கான மொத்த உர விற்பனையாளர்களாக செயல்பட்டு வருகின்றன. **2017–18** ஆம் ஆண்டில், கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் ரூ.**492.26** கோடி மதிப்பிலான **3,85,732** மெட்ரிக் டன் உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில், **1,40,016** மெட்ரிக் டன் அளவிற்கு யூரியா மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது. **2018–19** ஆம் ஆண்டில்,

**ரூ.629.77** கோடி மதிப்பிலான **4,06,922** மெட்ரிக் டன் உரம் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில் 1,44,802 மெட்ரிக் டன் அளவிற்கு யூரியா மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 5.2. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்படுத்தி வரும் சிறப்புத் திட்டங்கள்

### (i) சூரியசக்தி கொப்பரை உலர்கலன்கள் அமைத்தல்

தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில், 10 மாவட்டங்களில் 28 சூரிய சக்தி கொப்பரை உலர்கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வலகுகள் தேங்காயைக் குறைந்த செலவில், குறைந்த கால அளவில் தரமான கொப்பரையாக மாற்றுகின்றன. 2018–19 ஆம் ஆண்டில், 4,12,030 தேங்காய்கள் கொப்பரையாக மாற்றப்பட்டுள்ளன.

### (ii) கணினி எடைமேடைகள் அமைத்தல்

விவசாய பெருமக்கள் மற்றும் வணிகர்களின் வேளாண் விளைபொருட்கள் துல்லியமாக எடையிடப்படுவதை உறுதிப்படுத்திட பெருந்துறை, பவானி, உசிலம்பட்டி, நீலகிரி, துறையூர், பரமக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மொத்தம் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் கணினி எடைமேடைகள் நிறுவப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இந்த மண்டலங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

**(iii) ஏலமுறை நவீனப்படுத்துதல்**

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ஏலத்தினை துரிதமாகவும், ஒளிவுமறைவற்ற முறையிலும் நடத்திட ஏதுவாக சேலம், ஆத்தூர், ஈரோடு, பெருந்துறை மற்றும் திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.43.35 இலட்சம் மதிப்பில் மென்பொருள் பொருத்தப்பட்டு ஏலமுறை நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

**(iv) உலர்களங்கள் அமைத்தல்**

ஆலங்குடி, திருமயம், அறந்தாங்கி, திருமங்கலம், பென்னாகரம், கமுதி, தென்காசி, அவிநாசி, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி மற்றும் திருச்செங்கோடு (கொங்கணாபுரம் கிளை) ஆகிய 11 வேளாண்மை

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், **2014–15** முதல் **2016–17** வரையிலான ஆண்டுகளில் மொத்தம் ரூ.**111.35** இலட்சம் மதிப்பில் உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை வேளாண் பெருமக்களின் விளைபொருட்களை உலரவைத்து, தரம் பிரித்து, ஆதாய விலையில் விற்பதற்கு உதவுகின்றன.

**(v) விவசாயிகள் தங்கும் விடுதி புனரமைத்தல் மற்றும் சாலைவசதி ஏற்படுத்துதல்**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க கொங்கணாபுரம் கிளையின் வணிக வளாகம் மற்றும் விவசாயிகள் தங்கும் விடுதி ரூ.**17.75** இலட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்டதுடன் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கொண்டு வர ஏதுவாக ரூ.**25.00** இலட்சம் மதிப்பில் சாலை வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**(vi) விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவுதல்**

தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏதுவாக, துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தில்

ரூ.19.13 இலட்சம் மதிப்பிலும், கும்பகோணம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பிலும், இலால்குடி சிவஞானம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.20.00 இலட்சம் மதிப்பிலும் மற்றும் வேங்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ரூ.20.00 இலட்சம் மதிப்பிலும் விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் 2011–12 முதல் 2017–18 வரையிலான ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ளன. 2017–18 ஆம் ஆண்டில், 298.52 மெட்ரிக் டன் விதைகள் சுத்திகரிக்கப்பட்டுள்ளது. இது 2018–19 ஆம் ஆண்டில், **598.40** மெட்ரிக் டன் அளவிற்கு உயர்ந்துள்ளது.

### (vii) வேளாண் விளை பொருட்களைப் பதனிடுதல் மற்றும் அதன் மதிப்பினைக் கூட்டுதல்

சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பஞ்சு அரவை அலகுகள், பயறு பதனிடும் அலகுகள், மிளகாய் மற்றும் மஞ்சள் அரவை அலகுகள், குங்குமம் தயாரிக்கும் அலகுகள், எண்ணெய் பிழியும் அலகுகள், அரிசி ஆலைகள், நிலக்கடலை உடைக்கும் அலகுகள், பஞ்சு பொதியிடும் அலகுகள், சாமை, வரகு, புளி பதனிடும் அலகுகள் மற்றும் உறையிடும் அலகுகள்

ஆகிய பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. தற்போது **63** பதனிடும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பதனிடும் அலகுகள் வேளாண் பொருட்களின் மதிப்பினைக் கூட்டி உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க வழிவகை செய்து வருகின்றன.

ஒரு புதிய முயற்சியாக, **2014** முதல் **2019** வரையிலான ஆண்டுகளில் ரூ.405.31 இலட்சம் மதிப்பிலான 37 பதனிடும் அலகுகள், **26** கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் **6** பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் நிறுவப்பட்டுள்ளன. **2017–18** ஆம் ஆண்டில், இந்த **37** பதனிடும் அலகுகளில் **941.82** மெட்ரிக் டன் அளவிலான வேளாண் விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன. இது **2018–19** ஆம் ஆண்டில் **1,336.12** மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. மொத்தமுள்ள **63** பதனிடும் அலகுகளிலும், **2017–18** ஆம் ஆண்டில் **4,000.42** மெட்ரிக் டன் அளவிலான வேளாண் விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன. இது **2018–19** ஆம் ஆண்டில் **4,443.26** மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.

## (viii) உரக்கலவை இயந்திரம் நிறுவுதல்

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், **2008** ஆம் ஆண்டு முதல் உரக்கலவையினை தயாரித்து வருகிறது. உரக்கலவை உற்பத்தியை அதிகரித்திட, **2014–15** ஆம் ஆண்டில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மேட்டுப்பாளையம் கிளையில் ரூ.**15.00** இலட்சம் மதிப்பில் ஒரு புதிய உரக்கலவை இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. **2018–19** ஆம் ஆண்டில், **9,081** மெட்ரிக் டன் அளவிலான உரம் ரூ.**11.69** கோடி மதிப்பிற்கு இந்நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## (ix) சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் அலகு அமைத்தல்

மின்கட்டணத்தை குறைத்திடவும், சுற்றுச் சூழல் பாதுகாப்போடு போதிய மின்சாரம் பெறவும், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைமை அலுவலகம் மற்றும் சுயசேவைப் பிரிவு ஆகியவற்றில், **2016–17** ஆம் ஆண்டில் ரூ.**20.00** இலட்சம் மதிப்பீட்டிலும், **2017–18** ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.**7.00** இலட்சம் மதிப்பீட்டிலும்

சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.

**(x) மின்னணு ஏல முறை (e-Trading)**

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் சேவைகளை செம்மைப்படுத்தும் பொருட்டு, திருச்செங்கோடு, ஆத்தூர், சேலம், ஈரோடு, பெருந்துறை, அவிநாசி, இராசிபுரம் மற்றும் நீலகிரி ஆகிய **8** வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் விவசாய விளைபொருள்களை மின்னணு ஏலமுறை மூலம் விற்பனை செய்யவும் அதன் மூலம் புரள் வணிகத்தை உயர்த்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) நிதியுதவியுடன், மேற்படி சங்கங்களில், **2017–18** ஆம் ஆண்டில், ரூ.**35.62** கோடி மதிப்பீட்டில் மின்னணு ஏல முறையை (e-Trading) நடைமுறைப்படுத்திட ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின்

கீழ் இயக்க நிதியாக, **2018–19** ஆம் ஆண்டில் ரூ.**5.76** கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

### (xi) தொடர் சங்கிலி மேலாண்மைத் திட்டம் (Supply Chain Management)

**2017–18** ஆம் ஆண்டில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் இணைந்து, பழங்கள், காய்கறிகள் மற்றும் இதர அழுகக்கூடிய விளைபொருட்களை விற்பனை செய்திடும் பொருட்டு சேகரிப்பு மையங்கள் நிறுவுவதற்காக கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய **10** மாவட்டங்களைத் தெரிவு செய்துள்ளது. பழனி மற்றும் கமுதி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பிரதான சந்தைகள் (Main Markets) அமைப்பதற்கும், துறையூர், பென்னாகரம் மற்றும் நீலகிரி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் தொடக்கநிலை செயலாக்க மையங்கள் (Primary Processing Centres) அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

## (xii) ஊரகப் பகுதிகளில் கிடங்கு வசதியை விரிவுப்படுத்துதல்

ஊரகப்பகுதிகளில் அறுவடைக் காலங்களில் விவசாயிகள் விளை பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்வதை தவிர்த்திடவும், முறையான சேமிப்புக் கிடங்கு இல்லாததால் ஏற்படும் சேமிப்பு இழப்புகளை தவிர்த்திடவும் விளை பொருட்களை சேமித்து வைக்கும் வசதிகளை விரிவுபடுத்துவது இன்றியமையாததாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் சேமிப்பு வசதிகளை மேம்படுத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டு, ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF) மற்றும் சேமிப்பு கிடங்கு உட்கட்டமைப்பு நிதியுதவியுடன் (WIF), **2011** முதல் **2015** வரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், **5,10,600** மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட **3,879** கிடங்குகள், **ரூ.489.62** கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

ஊரகக் கிடங்குகளை சேமிப்புக் கிடங்கு மேம்பாடு ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்வதன் மூலம்

விவசாயிகள் வட்டி மானியம் பயன் பெற இயலும். சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் தற்போதைய திருந்திய நெறிமுறைகளின்படி, கிடங்குகளை இணைய வழியே பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நேர்மறை நிகர மதிப்பு கொண்ட 1,322 கூட்டுறவுச் சங்கங்களின் கிடங்குகளில், 1,303 கிடங்குகள் இணைய வழியே சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளன. இதுவரை 245 கிடங்குகள் ஆணையத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**(xiii) அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்**

வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில், 2014–15 முதல் 2017–18 வரையிலான ஆண்டுகளில், 19 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.6.78 கோடி மதிப்பில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகளும் பழைய கட்டடங்களை புனரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### (xiv) பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்

நகைக்கடனுக்கு ஈடாக வைக்கப்படும் உறுப்பினர்களின் நகைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு, **2013–14** முதல் **2015–16** வரையிலான ஆண்டுகளில், மொத்தம் ரூ.**2.46** கோடி மதிப்பில், **40** பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு, திருமங்கலம், வாடிப்பட்டி, உசிலம்பட்டி, பேரையூர் மற்றும் மேலூர் ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், **2015–16** ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.**75.50** இலட்சம் மதிப்பில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது.

### (xv) வாகனங்கள் வாங்குதல்

கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு திருச்செங்கோடு மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மொத்தம் ரூ.**24.62** இலட்சம் மதிப்பில் இரு வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.


# இயல்–III

## நுகர்வோர் கூட்டுறவுகள்

### 1. முன்னுரை

நுகர்வோர் கூட்டுறவுகள், தரமான பொருட்களை நியாயமான விலையில் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டன. நுகர்வோர் கூட்டுறவுகள் சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு விலை உயர்வினைக் கட்டுப்படுத்துவதில் பெரும்பங்காற்றுவதன் மூலம் பொதுமக்களுக்கு சேவை செய்து வருகின்றன.

தமிழ்நாட்டில், நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்றடுக்கு அமைப்பாக செயல்படுகிறது.



## 2. செயல்பாடுகள்

### 2.1 தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (TNCCF)

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மாநிலத்தில் உள்ள அனைத்து நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை நிறுவனமாகும். இணைப்புச் சங்கங்களை ஒருங்கிணைத்து, அவற்றின் செயல்பாட்டிற்கு துணைபுரியும் விதமாக அதிகமாக விற்பனையாகக்கூடிய நுகர்பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து, தேவைக்கேற்ப இணைப்புச் சங்கங்களுக்கு விநியோகம் செய்வது தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் முக்கிய நோக்கமாகும். மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு அச்சகங்களுக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் அச்சக மூலப்பொருட்களையும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் விநியோகம் செய்து வருகிறது. கூட்டுறவு நிறுவனங்களுக்கான பட்டாசு கொள்முதல் பணியினையும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைத்து செயல்படுகிறது.

## 2.2 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்

தமிழ்நாட்டில், **34** மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் செயல்படுகின்றன. மாநிலம் முழுவதும் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், **17** பல்பொருள் அங்காடிகள், **48** சிறு பல்பொருள் அங்காடிகள், **61** சில்லறை விற்பனை நிலையங்கள், **54** சுயசேவைப் பிரிவுகள், **77** கூட்டுறவு மருந்தகங்கள், **31** அம்மா மருந்தகங்கள், **36** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், **12** பெட்ரோல் வழங்கும் நிலையங்கள், **30** சமையல் எரிவாயு வழங்கும் அலகுகள் மற்றும் **82** மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன.

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு, அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்து, பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பான முறையில் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## 2.3 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள்:

தமிழ்நாட்டில், **370** தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள், **24** கூட்டுறவு மருந்தகங்கள், **26** அம்மா மருந்தகங்கள், **18** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் **3** பெட்ரோல் வழங்கும் நிலையங்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன.

## 3. நுகர்வோர் கூட்டுறவுகளின் செயல்பாடுகள்

**3.1** மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், நுகர்பொருட்களை உற்பத்திமையங்கள், தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றிடமிருந்து நேரடியாக மொத்தமாகக் கொள்முதல் செய்கின்றன. தரமான, கட்டுப்பாடற்ற பொருட்களை கூட்டுக் கொள்முதல் குழு மூலமும் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி மொத்தமாகக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்து வருகின்றன.

**2017–18** ஆம் ஆண்டில், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், **ரூ.730.85 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. இது, **2018–19** ஆம் ஆண்டில், **ரூ.870.30 கோடியாக** உயர்ந்துள்ளது.

**2017–18** ஆம் ஆண்டில், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், **ரூ.776.66 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களை விற்பனை செய்துள்ளன. இது, **2018–19** ஆம் ஆண்டில், **ரூ.921.20** கோடியாக உயர்ந்துள்ளது.

**3.2** தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் பொதுமக்களுக்கு அத்தியாவசிய நுகர்பொருட்களை தரமான விலையில் வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இவை நியாய விலைக் கடைகள், சில்லறை விற்பனை அங்காடிகள், பெட்ரோல் வழங்கும் நிலையங்கள், மாவு அரவை அலகுகள், மசாலாப்பொருட்கள் அரவை அலகுகள் மற்றும் சீயக்காய் அரவை அலகுகள் ஆகியவற்றையும் நடத்தி வருகின்றன.

**2017–18** ஆம் ஆண்டில், தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள், **ரூ.156.36 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. இது, **2018–19** ஆம் ஆண்டில், **ரூ.179.49 கோடியாக** உயர்ந்துள்ளது.

**2018–19** ஆம் ஆண்டில் தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள், **ரூ.277.55 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களை விற்பனை செய்துள்ளன.

### 4. அம்மா மருந்தகம்

தமிழ்நாடு அரசு, தரமான மருந்துகளை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கு முயற்சி மேற்கொண்டது. அதன்படி, மாநிலம் முழுவதும் முக்கியமான இடங்களில் அம்மா மருந்தகங்கள் திறக்கப்பட்டன.

தற்போது, தமிழ்நாட்டில், **112** அம்மா மருந்தகங்களும், **172** கூட்டுறவு மருந்தகங்களும் செயல்படுகின்றன.

இம்மருந்தகங்கள் மூலம் பொதுமக்களுக்கு அதிகபட்சமாக **20%** தள்ளுபடியில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு, மருந்துகள் வாங்கும்போது ஏற்படும்

செலவினத்தை பொதுமக்கள் சேமிப்பதற்கு கூட்டுறவுகள் சேவை புரிந்து வருகின்றன.

**2017–18** ஆம் ஆண்டில், **ரூ.154.38 கோடி** மதிப்பிற்கு அம்மா மற்றும் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது, **2018–19** ஆண்டில் **ரூ.159.39 கோடியாக** உயர்ந்துள்ளது.

**31.03.2019** வரை அம்மா மருந்தகங்கள் மற்றும் கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் **ரூ.797.15 கோடி** மதிப்பிலான மருந்துகள் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**4.1** பொதுமக்களுக்கு, குறைந்த விலையில் தரமான மருந்துகளை வழங்கும் பொருட்டு, கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தி வரும் மருந்தகங்களில் மூலக்கூறு மருந்துகளும் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை (டி.யு.சி.எஸ்., பூங்காநகர்), காஞ்சிபுரம், தர்மபுரி, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மண்டலங்களில் செயல்பட்டுவரும் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் நீலகிரி – குன்னூர் நிக்கல்சன், உத்திரமேரூர் மற்றும் நங்கநல்லூர் தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளிலும் வணிகப்பெயர்

கொண்ட (Branded Medicine) மருந்துகளுடன் மூலக்கூறு மருந்துகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் மூலக்கூறு மருந்துகளை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்**

சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், தரமான காய்கறிகளை நியாயமான விலையில் மக்கள் வாங்குவதற்கு உதவும் வகையில் நகர்ப்புறங்களில் திறக்கப்பட்டன. விவசாயிகளின் விளை நிலங்களிலிருந்து பசுமையான காய்கறிகள், உடனுக்குடன் தொகை செலுத்தி, இடைத்தரகர்களின்றி நேரடியாகக் கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், நுகர்வோர்களையும், விவசாயிகளையும் நேரடியாக இணைக்கின்றன.

தற்போது, மாநிலத்தில், **3** நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்

கழகத்தால் நடத்தப்பட்டு வரும் **14** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், நவம்பர் **2018–**இல் புதியதாக திறக்கப்பட்ட **4** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் உட்பட மொத்தம் **79** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

**23.06.2019** தேதி வரை **45,806 மெட்ரிக்டன்** அளவிலான காய்கறிகள், **ரூ.133.21 கோடி** மதிப்பிற்கு பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**6. சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை**

வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களான துவரம்பருப்பு, உளுந்தம் பருப்பு, மிளகாய், புளி, அரிசி, நல்லெண்ணெய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகிவற்றின் விலை, திடீரென்று உயரும்போது கூட்டுறவுகள் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்கள் அதிகளவில் கிடைக்கும் இடங்களில், மாநில விலை நிலை நிறுத்தும் நிதியினை பயன்படுத்தி கொள்முதல் செய்து, கூட்டுறவுகளின் விற்பனை அலகுகள் மூலமாக வெளிச்சந்தை விலையைவிடக் குறைந்த

விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் விலையைக் கட்டுப்படுத்துகின்றன.

## 6.1 மாநில விலை நிலை நிறுத்தும் நிதி (State Price Stabilisation Fund)

**மாண்புமிகு அம்மா அவர்களால்**, கூட்டுறவுகள் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக, **ரூ.100 கோடி** விலை நிலை நிறுத்தும் நிதி ஏற்படுத்தப்பட்டது. மேற்படி நிதியினை பயன்படுத்துவதற்கான கால அளவு, மேலும் மூன்று ஆண்டுகளுக்கு **01.11.2017** முதல் **31.10.2020** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகளுக்கென, இதுவரையில் **ரூ.56.40 கோடி** தொகையினை விலை நிலை நிறுத்தும் நிதியிலிருந்து அரசு வழங்கியுள்ளது.

வெளிச்சந்தையில், அத்தியாவசியப் பொருட்களான துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு, குண்டு மிளகாய், புளி, அரிசி மற்றும் நல்லெண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்ந்தபோது சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு **ரூ.15.73 கோடி** விடுவிக்கப்பட்டுள்ளது.

# இயல் –IV

## சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள்

விவசாயிகள், பழங்குடியினர் மற்றும் அடித்தட்டு மக்களின் மேம்பாட்டுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் தங்களை பல்வேறு துறைகளில் ஈடுபடுத்திக் கொள்கின்றன. சில சிறப்பு நோக்கங்களுக்காக தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள், குறிப்பிட்ட பிரிவு மக்களின், குறிப்பிட்ட தேவையை பூர்த்தி செய்கின்றன.

### (i) பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS)

மலைவாழ் மக்களின் வேளாண் உற்பத்தியை அதிகரித்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், ஒருங்கிணைந்த கடன்திட்டம் மூலம் அவர்களது வருவாயை அதிகரித்தல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை மலைப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடி மற்றும் பழங்குடி அல்லாதோருக்கு விநியோகித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண் இடுபொருட்கள் வழங்குதல், வேளாண் விளைபொருள் விற்பனை செய்ய உதவுதல் மற்றும் சிறப்பங்காடி நடத்துதல் ஆகிய பணிகளையும் செய்து வருகின்றன. தற்போது மாநிலத்தில் 22 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 2017–18 ஆம் ஆண்டில், ரூ.123.92 கோடி அளவிற்கு இருந்த இச்சங்கங்களின் புரள் வணிகம், 2018–19 ஆம் ஆண்டில், ரூ.146.33 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

பழங்குடியின மக்களின் சமூக–பொருளாதார நிலையினை மேம்படுத்தவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஆதாய விலை கிடைக்கச்செய்யவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், பொதுவான வணிக முத்திரையிடப்பட்ட தேன், சாமை, புளி மற்றும் வரகு ஆகிய பொருட்களின் விற்பனை **20.06.2013** அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், **31.05.2019** வரை **11,718** கிலோ தேன், **45,613** கிலோ சாமை, **92,766** கிலோ புளி மற்றும் **10,162** கிலோ

வரகு ஆகிய பொருட்கள் மொத்தம் ரூ.1.69 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(ii) தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்**

உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பினை ஒப்பந்தப் பணிகள் மூலம் உறுதி செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, தமிழ்நாட்டில் **45** தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் **23,068** உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

**(iii) துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் லிட்., (TUCAS)**

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம், கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூரில் செயல்பட்டுவரும் ஒரு சிறப்பு வகை தொடக்க விவசாயக் கூட்டுறவு நிறுவனமாகும். வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவதுடன், உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறது. இந்நிறுவனம் பயிர்க்கடன், அடமானக்கடன் மற்றும் நகைக்கடன் போன்ற கடன்களை உறுப்பினர்களுக்கு

வழங்கி வருகிறது. **2018–19** ஆம் ஆண்டில், ரூ.73.92 இலட்சம் மதிப்பிற்கு விதைகளை விற்பனை செய்ததுடன், ரூ.**40.19** இலட்சம் மதிப்பிற்கு வேளாண் உபகரணங்களை பிற கூட்டுறவு நிறுவனங்களுக்கு விற்பனை செய்துள்ளது.

இச்சங்கம், தனது உறுப்பினர்களுக்கு தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக, நிகர இலாபத்தில் **20%** பங்கு ஈவுத் தொகை வழங்கி வருகிறது.

### (iv) கூட்டுறவு அச்சகங்கள்

மாநிலத்தில் தற்பொழுது **26** கூட்டுறவு அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை தங்கள் செயல் எல்லையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், அரசு அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் அச்சுத்தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றன. இக்கூட்டுறவு அச்சகங்களின் புரள்வணிகம் **2017–18** ஆம் ஆண்டில், ரூ.**56.95** கோடியாக இருந்து, **2018–19** ஆம் ஆண்டில் ரூ.**58.39** கோடியாக உயர்ந்துள்ளது.

சென்னை, வேலூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய பெருநகரங்களில் செயல்பட்டு வரும் 7 கூட்டுறவு அச்சகங்கள் ரூ.**3.68** கோடி மதிப்பீட்டில், தனியார் அச்சகங்களுடன் போட்டியிடும் வகையில் **2012–13** ஆம் ஆண்டில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. இந்நவீனமயமாக்கப்பட்ட கூட்டுறவு அச்சகங்கள் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் பெரும்பாலான அச்சுப்பணிகள் தரமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(அ) கூட்டுறவு அச்சகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்**

**2013–14** மற்றும் **2016–17** ஆம் ஆண்டில், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்திட தலா ரூ.**50.00** இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்ட இவ்விரு கூட்டுறவு அச்சகங்களும் தற்போது புதிய கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**(ஆ) கூட்டுறவு அச்சகங்களை 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டுகளில் நவீனமயமாக்குதல்**

இராமநாதபுரம் மாவட்ட (இருப்பு காரைக்குடி) மற்றும் தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்திட, 2016–17 ஆம் ஆண்டில் முறையே ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.19.22 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதேபோன்று, 2017–18 ஆம் ஆண்டில் விருதுநகர், சேலம், கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டக் கூட்டுறவு அச்சகங்கள் மொத்தம் ரூ.74.58 இலட்சம் மதிப்பில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

## இயல் – V

## பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

### 1. முன்னுரை

**1.1** தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013–ஐ நடைமுறைப்படுத்தி, அனைவருக்கும் உணவு பாதுகாப்பினை உறுதிசெய்வதில் பொதுவிநியோகத் திட்டம் முக்கிய பங்காற்றுகிறது. தமிழகத்தில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதில் கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. 31.03.2019 அன்று மாநிலத்தில் மொத்தம் **32,924** நியாயவிலைக்கடைகளுடன் பரவலான விநியோக தொடரமைப்பை கூட்டுறவுகள் கொண்டுள்ளன. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு:

| வ. எண் | கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் | நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை (31.03.2019) |
|---|---|---|
| 1. | மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | **3,361** |
| 2. | கூட்டுறவு விற்பனைச் சங்கம் | **2,525** |
| 3. | பிரதம கூட்டுறவு பண்டகசாலை | **1,918** |

| **வ. எண்** | **கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்** | **நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை (31.03.2019)** |
|---|---|---|
| 4. | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | **24,328** |
| 5. | நகர கூட்டுறவு கடன் சங்கம் | **470** |
| 6. | பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் | **238** |
| 7. | இதர வகை கூட்டுறவு சங்கம் | **84** |
| | **மொத்தம்** | **32,924** |

**1.2** அரிசி, கோதுமை, சர்க்கரை முதலிய அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யும் பணியை **28** கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், **56** கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், **10** பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் **2** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவை உள்ளிட்ட **96** முதன்மைச் சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. இந்த முதன்மைச் சங்கங்கள் **4,044** இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து வருகின்றன. இதைத்தவிர **8** நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை

பண்டகசாலைகளும், **31** கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், **149** பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளும், **117** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், **7** பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், **8** நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களும் மற்றும் **5** இதர வகை கூட்டுறவுச் சங்கங்களும், ஆக மொத்தம் **325** கூட்டுறவுச் சங்கங்கள் சுயஎடுப்பு சங்கங்களாக செயல்பட்டு வருகின்றன.

**2. கூட்டுறவு நியாய விலைக் கடைகள்**

**_2.1** அரிசி, சர்க்கரை மற்றும் கோதுமை ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்க ஏதுவாக, **32,924** நியாயவிலைக்கடைகளை நடத்துவதுடன், அத்தியாவசிய எரிபொருளான மண்ணெண்ணெயை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ஏதுவாக, பிரத்யேகமாக **258** மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்றன. **மேலும், சிறப்பு பொதுவிநியோகத்திட்ட பொருட்களான துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவையும், நியாயவிலைக் கடைகள் மூலம் தமிழக அரசால் வழங்கப்படும் மானிய விலையில் விற்பனை**

**செய்யப்படுகின்றன.** கட்டுப்பாடற்ற பொருட்களான ஊட்டி தேயிலை, அம்மா உப்பு போன்றவையும் நியாயமான விலையில் நியாயவிலைக்கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

## 3. நகரும் நியாய விலைக் கடைகள்

**3.1** தமிழ்நாட்டில் 43 நகரும் நியாயவிலைக் கடைகள் மூலம், மக்கள் எளிதில் அணுக இயலாத ஊரகப் பகுதிகள் மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அவர்கள் வசிக்கும் இடங்களுக்கே சென்று விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், 2 நகரும் நியாயவிலைக் கடைகள் சென்னை மாநகரில் செயல்பட்டு வருகின்றன.

இந்த 45 நகரும் நியாயவிலைக் கடைகள் மூலம் 283 கிராமங்கள் மற்றும் சென்னையில் 54 தெருக்களில் வசிக்கும் 37,708 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மாவடைப்பு மற்றும் குழிப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு 85 கி.மீ. தூரம் வரை

சென்று நடமாடும் நியாயவிலைக் கடை மூலம் முறையே 156 மற்றும் 259 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருச்சி மாவட்டம், பச்சமலைப் பகுதியில் எளிதில் அணுக இயலாத, மலைக் கிராமங்களான சின்ன பழமலை மற்றும் பெரிய பழமலை ஆகிய கிராமங்களில் உள்ள 48 குடும்ப அட்டைதாரர்களுக்கு நடமாடும் நியாயவிலைக் கடை மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜவ்வாதுமலை பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் நகரும் நியாயவிலைக் கடை மூலம் 19 கிராமங்களில் உள்ள 1378 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

2019ம் ஆண்டில், நீலகிரி மாவட்டத்தில் சுண்டப்பட்டி, கோழித்துறை மற்றும் அரையூர்மட்டம் ஆகிய 3 நகரும் நியாயவிலைக்கடைகள் ஏற்படுத்தப்பட்டு, 249 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

## 4. நியாயவிலைக்கடைகளில் தேங்கியுள்ள காலிக்கோணிகளை எம்.எஸ்.டி.சி. நிறுவனத்திடம் மின்னணு ஏலம் (e-auction) மூலம் விற்பனை செய்தல்

கூட்டுறவுத்துறையின் மூலம் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வதன் மூலம் சேகரமாகும் காலிக்கோணிகளை "மாவட்ட காலிக்கோணி விற்பனைக்குழு" மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் காலிக்கோணிகள் விற்பனையாகாமல் பெருமளவு தேங்கியிருந்தது. எனவே, இந்நடைமுறையை மாற்றி செப்டம்பர் **2017** முதல் அனைத்து நியாய விலைக்கடைகளிலும், தேங்கியுள்ள சணல் காலிக்கோணிகள், சம்பந்தப்பட்ட முதன்மை சங்கங்களில் சேகரிக்கப்பட்டு, காலிக்கோணி விவரங்கள் மத்திய அரசு நிறுவனமான MSTC (Metal Scrap Trade Corporation Ltd.,) வலைப்பக்கத்தில் (Portal) பதிவேற்றம் செய்து, வெளிப்படைத்தன்மையுடன், MSTC (Metal Scrap Trade Corporation Ltd.,) நிறுவன மின்னணு ஏலப் பணித்தளத்தின் மூலம் (e-auction Platform) ஏலம் விடும் முறையினை நடைமுறைப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் **31.03.2019** வரை **11,13,01,344** காலிக்கோணிகள் விற்பனையாகியுள்ளது.

## 5. இதர பொருட்களின் விற்பனை விவரம்

### (i) ஊட்டி தேயிலை விற்பனை விவரம்

**மாண்புமிகு அம்மா அவர்களால் 2001 ஆம் ஆண்டில்,** சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, இண்ட்கோசர்வ் ( INDCOSERVE - The Tamilnadu Small Tea Growers' Industrial Cooperative Tea Factories' Federation Ltd.,) நிறுவனத்திலிருந்து ஊட்டி தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. **2014–15**ம் ஆண்டு முதல் **2018–19**ம் ஆண்டு வரை **14,725** மெ.டன் ஊட்டி தேயிலை நியாயவிலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### (ii) அம்மா உப்பு விற்பனை விவரம்

அயோடின் பற்றாக் குறையால் ஏற்படும் நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து, அயோடின் கலந்த உப்பு கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

**2018–19**இல் **30,702** மெ.டன் அம்மா உப்பு நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 6. நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்

கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்படும் **32,924** நியாயவிலைக்கடைகளின் கட்டட விவரம் பின்வருமாறு:–

| வரிசை எண் | விவரம் | நியாயவிலைக்கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சொந்தக் கட்டடம் | **3,294** |
| 2 | அரசுக் கட்டடம் | **17,163** |
| 3 | வாடகையில்லா கட்டடம் | **5,311** |
| 4 | வாடகைக் கட்டடம் | **7,156** |
| | **மொத்தம்** | **32,924** |

மாண்புமிகு பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களால், ஒதுக்கீடு செய்யப்படும் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் பல்வேறு கட்டங்களாக நியாயவிலைக்கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த எட்டு ஆண்டுகளில் **1,940** நியாயவிலைக்கடைகளுக்கு புதிய கட்டடங்கள்

கட்டப்பட்டுள்ளன. **2018–2019** ஆம் ஆண்டில் **91** நியாயவிலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

## 1. நியாயவிலைக்கடைகளை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம்

கூட்டுறவுச் சங்கங்கள் சேவை மனப்பான்மையுடன் நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும், விலையில்லாமல் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே குடும்ப அட்டைதாரர்களுக்கு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் விளிம்புத் தொகையுடன், கூட்டுறவுச் சங்கங்கள் பொதுவிநியோக திட்டத்தினை செயல்படுத்துவதால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்யும் பொருட்டு, அரசால் மானியம் வழங்கப்படுகிறது.

**2010–11** முதல் **2017–18** வரை பொது விநியோக திட்ட மானியமாக ரூ.**1,883.73** கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

(தொகை ரூ.கோடியில்)

| வ.எண் | நிதியாண்டு | வழங்கப்பட்ட மானியம் |
|---|---|---|
| 1 | 2010–11 | 150.00 |
| 2 | 2011–12 | 150.00 |
| 3 | 2012–13 | 120.00 |
| 4 | 2013–14 | 120.00 |
| 5 | 2010–11 முதல் 2013–14 வரை (நிலுவை மானியம் நான்கு தவணைகளில் அளிக்கப்பட்டது – ரூ102.9325 x 4) | 411.73 |
| 6 | 2014–15 (120.00+214.76) | 334.76 |
| 7 | 2015–16 (120.00+207.24) | 327.24 |
| 8 | 2016–17 (முன்பணம்) | 120.00 |
| 9 | 2017–18 (முன்பணம்) | 150.00 |
| | **மொத்தம்** | **1,883.73** |

## 8. அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள்

ஒரு புதிய முயற்சியாகவும், நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களும் பொதுமக்களும் பயன்பெறும் வகையில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது** ஆணையின் படி **மாநிலம் முழுவதும் அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் 103 நியாயவிலைக்**

**கடைகளில் திறக்கப்பட்டன.** முக்கிய நகரங்கள், மாவட்ட தலைமையிடங்கள், வட்ட தலைமையிடங்கள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நியாயவிலைக் கடைகளில் பொதுவிநியோகத்திட்ட அத்தியாவசியப் பொருட்களுடன், குடும்ப அட்டைதாரர்களின் மாதாந்திர தேவைகளான மளிகைபொருட்கள், எண்ணெய், அழகுசாதனப் பொருட்கள் ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளும் வகையில் அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகளில் **300 வகையான கட்டுப்பாடற்ற பொருட்கள் பொதுமக்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையில் இருந்து (MRP), 5%–க்கு குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.** இதனால் ஏழை எளிய மக்கள் பயன்பெறுவதோடு, அவர்களின் வாங்கும் திறன் அதிகரிக்கப்படுகிறது. மேலும், தரமான பொருட்களை நியாயமான விலையில் பெறுவதற்கு இச்சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் பயன்படுவதோடு, வெளிச்சந்தை விலையினை கட்டுப்பாட்டில் வைத்திடவும், மேலும் கூட்டுறவு துறையின் சேவையை மக்கள் அறிய ஒரு வாய்ப்பாகவும் அமைகிறது.

அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் அனைத்திலும், இதர பொருட்களுடன் ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தயாரிப்புகளான ‘‘மங்களம் மஞ்சள் தூள், மசாலா தூள் மற்றும் குங்குமம்’’ போன்ற பொருட்களும், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தயாரிப்புகளான ‘‘அர்த்தநாரீஸ்வரா பிராண்ட் அரிசி, உளுந்தம்பருப்பு, நல்லெண்ணெய், கடலை எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய்’’ ஆகிய பொருட்களும், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தயாரிப்புகளான ‘‘பசுமை பிராண்ட் நல்லெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய்’’ போன்றவையும், மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தயாரிக்கும் ‘‘சிறுதானியங்களான வரகு, சாமை, தினை’’ மற்றும் இதர வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களால் கொள்முதல் செய்யப்படும் ‘‘ஏலக்காய், மிளகு, வெல்லம், புளி’’ போன்ற பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

## 9. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

இந்தியாவிலேயே, அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தை செயல்படுத்துவதில் முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ஏழை எளிய மற்றும் அடித்தட்டு மக்களின் **நிலைத்த நீடித்த வளர்ச்சி** (Sustainable Development) ஏற்படுவதற்கும் பொதுவிநியோகத் திட்டம் முக்கிய பங்காற்றி வருகிறது. தமிழகத்தில் உள்ள **32,924** கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சிறப்பு பொதுவிநியோகத் திட்டப் பொருட்கள் தங்குதடையின்றி வழங்கப்பட்டு **உணவு பாதுகாப்பானது** (Food Security) உறுதி செய்யப்படுகிறது. மேலும், தமிழகத்தில் **17.05.2011** முதல் விலையில்லா அரிசி வழங்கப்படுவதுடன், **02.02.2017** முதல் விலையில்லா கோதுமையும் அனைத்து தரப்பு மக்களுக்கும் வழங்கப்பட்டு, தமிழக ஏழைஎளிய மக்கள் பசியின்றி வாழ வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ''அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டம்'' தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, ஆண்டு முழுவதும் பாதுகாப்பான உணவை பெறுவது உறுதி செய்யப்பட்டு வருவதால், **''பட்டினிக்கு முடிவு கட்டுவோம்''** (To end Hunger) என்னும் இலக்கு ஏற்கெனவே தமிழ்நாட்டில் எய்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு மக்கள் நலனைக் காக்கும் விதமாக, கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.97, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 1.11.2011 மற்றும் அரசாணை எண் 112, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3.7.2013 ஆகியவற்றின்படி **ரூ.100 கோடியிலான விலை நிலை நிறுத்தும் நிதியினை** ஏற்படுத்தி உள்ளது.

அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு வகைகள், புளி, எண்ணெய், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை அதிக அளவில் உயரும்போது விலை கட்டுப்படுத்தும் நிதியினைக் கொண்டு கொள்முதல் செய்து, கூட்டுறவுகளின் விற்பனை அலகுகள் மூலம் விற்பனை செய்வதன் மூலம் நுகர்வோருக்கு குறைந்த

விலையில் பொருட்கள் கிடைக்கப் பெறுவதுடன், வெளிச்சந்தை விலையும் கட்டுப்படுத்தப்படுகிறது.

2011 ஆம் ஆண்டு முதல் நாளது தேதி வரை விலைக் கட்டுப்படுத்தும் நிதியினைப் பயன்படுத்தி, சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுப்படுத்தப்பட்டு நிலையான நுகர்வு உறுதி செய்யப்படுகிறது.

# இயல்–VI

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### 1. முன்னுரை

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் பிரதான நோக்கத்துடன் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சியினை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை கோட்பாடுகளை பொதுமக்களிடையே கொண்டு செல்லும் பொருட்டும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும் பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டுறவு வார விழாக்களையும் ஏற்பாடு செய்து வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களின் நிகர இலாபத்தில் ஒரு பகுதியை கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும் மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கும் வசூலித்து வருகிறது. கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவு தொடர்பான செய்திகளை மக்களிடையே கொண்டு செல்வதற்கு இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

## 2. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள்

மாநிலத்தில் 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத்துறைப் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் குறுகியகாலப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் முறையான கூட்டுறவு பட்டயப் பயிற்சியை நடத்துவதுடன், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக் கல்வி மூலம் கூட்டுறவு பட்டயப் பயிற்சியினையும் அளித்து வருகின்றன. 2018-19 ஆம் ஆண்டில், 20 பயிற்சி நிலையங்களில் **1,881** மாணவர்கள் முழு நேரக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், **1,656** பணியாளர்கள் அஞ்சல்வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சமையல் கலை கைவினைஞர்களை உருவாக்கும் பொருட்டு, ஏழு கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மற்றும் இரண்டு கூட்டுறவு தொழிற் பயிற்சி நிலையங்களில்

சான்றிதழுடன் கூடிய சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதுவரை 772 மாணவர்கள் இப்பயிற்சியில் சேர்ந்துள்ளனர். இவர்களில் **436** மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

## 3. தொழிற் கல்வி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், இரண்டு கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிறுவனங்களை பர்கூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியையும் நடத்தி வருகிறது. இக்கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்களில், கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி, தையற்கலை, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, மின் பழுதுபார்த்தல், சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது. 2018-19 ஆம் ஆண்டில், மேற்கண்ட இரு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் **273** மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இலால்குடி கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரி, இயந்திரப் பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் ஆகிய மூன்று பட்டயப் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

2018-19 ஆம் ஆண்டில் மேற்காணும் பட்டயப் பயிற்சிகளில் **337** மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 4. கூட்டுறவு மேலாண்மை தொடர்பான உயர் பட்டயப் பயிற்சி மற்றும் குறுகியகாலப் பயிற்சி

தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுவால் (புதுடெல்லி), சென்னை மற்றும் மதுரையில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், நிதி உதவி அளித்து வருகிறது. இவ்விரு நிலையங்களில் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப்பயிற்சி நடத்தப்பட்டு வருவதுடன் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டப்படிப்பும் (MBA) நடத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையங்களில், கூட்டுறவுத் துறை பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கு குறுகியகாலப் பயிற்சி நடத்தப்படுகின்றது. 2018-19ஆம் ஆண்டில் நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம் சென்னையில் **75** குறுகிய காலப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. இதில் **2,159** பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

இதே போன்று **2018–19**ஆம் ஆண்டில், கூட்டுறவு மேலாண்மை நிலையம், மதுரையில் **38** குறுகிய காலப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. இதில் **666** பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**5. பல்கலைக் கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெரியார் பல்கலைக் கழகம் மற்றும் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் **ரூ.5 இலட்சம்** வைப்புத் தொகை வைத்துள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் கூட்டுறவு மற்றும் அதன் தொடர்புடைய இனங்களில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை **25** ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூ.**21.25** இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 6. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் பயன்பாடு

கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 3% தொகையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கு அளிக்கின்றன. இந்நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்ற பிறகே விடுவிக்கப்படுகிறது. இந்நிதியிலிருந்து கூட்டுறவு ஆராய்ச்சிக்கு மானியமாகவும், அதே சமயம் கூட்டுறவு வளர்ச்சிக்கு வட்டியில்லாக் கடனாகவும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியுதவியாகவும் வழங்கப்படுகிறது.

2011-12 முதல் 2018-19 வரை, **ரூ.55.09** கோடி மானியமாகவும், **ரூ. 230.61** கோடி வட்டியில்லாக் கடனாகவும் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுதல், அலுவலகக் கட்டடம் கட்டுதல், உலர் கலன்கள் கட்டுதல், வாகனங்கள் வாங்குதல், சூரிய உலர் கலன்கள் மற்றும் சூரிய தகடு நிறுவுதல், நுகர்வோர் சுய சேவைப் பிரிவை நவீனப்படுத்துதல், கூட்டுறவுச் சங்கங்களை நவீனமாக்குதல், சிப்பமிடும் கருவிகள் வாங்குதல், எடையிடும் இயந்திரம் அமைத்தல், பதனிடும் அலகுகள் அமைத்தல், கரும்பு

அறுவடை இயந்திரம் வாங்குதல், கூட்டுறவு வளாகம் கட்டுதல் மற்றும் நெசவாளர்களுக்கு பெடல் தறிகள் வழங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

**7. கூட்டுறவுக் கல்வி நிதியின் பயன்பாடு**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 2% தொகையை வழங்குகின்றன. இந்நிதியிலிருந்து கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவு பிரச்சாரம், கூட்டுறவு விளம்பரம் போன்ற பணிகளுக்கு கூட்டுறவுக் கல்வி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்று நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 2011-12 முதல் 2018-19 வரையிலான எட்டு ஆண்டுகளில் **ரூ.56.09** கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், துறை அலுவலர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துதல், மாவட்டங்களில் உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுதல் ஆகியவற்றிற்கு இந்நிதி பயன்படுகிறது.

## இயல்–VII

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் (ICDP)

**1.** ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் என்பது ஒரு மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டமானது மாநில அரசு மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக (NCDC) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

**2.** தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக ஆலோசனையின்படி, மாநில அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத்தில் இத்திட்டமானது ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படுகிறது.

**3.** தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டமானது, **1989** ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, **28** மாவட்டங்களில் ரூ.**467.90** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**4.** இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் செயல்படுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதனை குறிக்கோளாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

**5.** ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்திற்கான நிதிஉதவிகள், தமிழக அரசால் வழங்கப்பட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து மறுநிதியாக பெறப்படுகிறது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது, திட்ட செயலாக்க முகமையாக (PIA) செயல்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி உதவி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தமிழக அரசுக்குக் கடனாக வழங்கப்பட்டு, தமிழக அரசிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனாகவும், பங்குத்தொகையாகவும் வழங்கப்படுகிறது. விவசாய விற்பனைத் திட்டத்திற்கும், பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு, அலுவலக கட்டிடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துகின்ற ‘துணைத் திட்டங்களில்’ நலிவடைந்த பிரிவினருக்கு திட்டத் தொகையில் 15% தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து மானியமாகப் பெறப்படுகிறது.

**6.** தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக மாநில அரசால் **2011–12** ஆம் ஆண்டு முதல் **2018–19** ஆம் ஆண்டு வரை ரூ.**461.97** கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

**7.** தற்போது ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டமானது நாமக்கல், திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் சென்னை ஆகிய நான்கு மாவட்டங்களில் ரூ.**168.86** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**8.** **32** மாவட்டங்களில் இத்திட்டம் முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ள நிலையில், தற்பொழுது **9** மாவட்டங்களில் இரண்டாம் கட்டமாக செயல்படுத்த அரசு ஆணை வழங்கப்பட்டு அதற்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றது.

## இயல்–VIII

## கூட்டுறவு தேர்தல்

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 14 ஆண்டுகளுக்குப் பின் 2013ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்தம்) சட்டம் 2012–இன்படி சேர்க்கப்பட்ட 33–A என்ற புதிய பிரிவில், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைத்திட வகை செய்துள்ளது. பிரிவு 33–A–இன் கீழ் அரசினால் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தேர்தல் ஆணையம் 08.02.2013 முதல் செயல்படத் துவங்கியது.

அரசியல் அமைப்பு 97வது திருத்தச் சட்டம் 2011இன் படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவில் ஒரு பட்டியல் வகுப்பு உறுப்பினரும் மற்றும் இரண்டு பெண் உறுப்பினர்களும் மட்டுமே இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் **மாண்புமிகு அம்மா அவர்களின்** ஆணையின்படி

சமூக நீதியினை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில், **2013**ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் படி, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவில் **18**% பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கும் மற்றும் **30**% பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, **2013**இல் **22,552** சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு, **2,04,889** நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

**2013** ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுக்களின் **5** ஆண்டு பதவிக்காலம் முடிவடைவதையொட்டி, தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்திட தேர்தல் அறிவிப்பு வழங்கியுள்ளது. அதன்படி, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் **14** பிற செயற்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிற **18,468** தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நான்கு நிலைகளில், முதல் கட்டத்திலும் (வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தவிர), **197** கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டாவது கட்டத்திலும், **82** கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூன்றாவது கட்டத்திலும் தேர்தல்

நடைபெற்றுள்ளது. அதில் முதல் கட்டத்தில், 17,557 சங்கங்களிலும், இரண்டாம் கட்டத்தில் 185 சங்கங்களிலும், மூன்றாம் கட்டத்தில் 62 சங்கங்களிலும் தேர்தல் முடிவுற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவினர் பதவியேற்றுள்ளனர்.

பல்வேறு காரணங்களினால் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள, முதல் கட்டத்தில் உள்ள 911 சங்கங்களுக்கும், இரண்டாம் கட்டத்திலுள்ள 12 சங்கங்களுக்கும், மூன்றாம் கட்டத்தில் உள்ள 20 சங்கங்களுக்கும் தேர்தல் திட்டம் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட வேண்டும்.

நான்காம் கட்டத்திற்குட்பட்ட 58 சங்கங்களுக்கும், ஐந்தாம் கட்டத்திற்குட்பட்ட ஒரு சங்கத்திற்கும் (தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்) தேர்தல் அறிவிப்பு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்க தேர்தல் ஆணையத்தினால் வெளியிடப்பட வேண்டும்.

## நிறைவுரை

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் அனைத்து தரப்பு மக்களையும், அனைத்து வகையிலும் வளர்ச்சி பெறுவதை இலக்காகக் கொண்டு செயலாற்றுகிறது. அனைத்து மக்களின் முன்னேற்றத்திற்காகவும் குறிப்பாக ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவினர் மூலமாக தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் **2023–**ஐ செயல்படுத்தும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**செல்லூர் கே. ராஜூ**
**கூட்டுறவுத்துறை அமைச்சர்**